# யா/ கைதடி கலைவாணி வித்தியாலயம்

# பரிசில் தினம்

## - 2017 -



காலம் : 18-07-2017 செவ்வாய்க்கிழமை

இடம் : வித்தியாலய மண்டபம்

நேரம் : பிற்பகல் 1.00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

# யா/ கைதடி கலைவாணி வித்தியாலயம்

## - 2017 -

## மகுட வாசகம்

"கற்க அது தக நிற்க"

## தூரநோக்கு

கைதடிப் பிரதேசத்தின்
மனிதமும் மாண்பும் மிக்க நல்லதோர் சமுதாயத்தை
உருவாக்கவல்ல முன்னணி ஆரம்பப்
பாடசாலையாகத் திகழ்தல்.

## பணிக்கூற்று

நவீன கற்றல் உத்திகளைப் பயன்படுத்தக்கூடியவாறு
ஆசிரிய வாண்மையை மேம்படுத்தி
பாடசாலை சமூகத்தின் ஒத்துழைப்புடன்
பாடசாலையின் தூரநோக்கை அடைய அர்ப்பணிப்புடன்
செயற்படல்.

யா/ கைதடி கலைவாணி வித்தியாலயம்

# பரிசளிப்பு விழா - 2017

காலம் :- 18-07-2017 செவ்வாய்க்கிழமை

இடம் :- வித்தியாலய மண்டபம்

நேரம் :- பிற்பகல் 1.00 மணி

தலைமை

**திரு.சி. சிவகுமார்**

(வித்தியாலய அதிபர்)

பிரதம விருந்தினர்

**உயர்திரு. சு.கிருஷ்ணகுமார்**

(வலயக்கல்விப் பணிப்பாளர் - தென்மராட்சி)

சிறப்பு விருந்தினர்

**திரு.ப.செல்லத்துரை**

(முன்னாள் அதிபர் - யா/கைதடி கலைவாணி வித்தியாலயம்)

கௌரவ விருந்தினர்

**திருமதி.க.மகிந்தன்**

(பிரதி அதிபர் - யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- பாடசாலைச் சமூகம் -

யா/கைதடி கலைவாணி வித்தியாலயம்

கைதடி


வித்தியாலய அதிபர்
திரு. சிவபாதசுந்தரம் - சிவகுமார் [B.A(Hons), M.A, PGDE, M.Ed]


முகாமைத்துவக் குழு

# நிகழ்ச்சி நிரல்

- விருந்தினர்களை வரவேற்றல்
- தேசியக் கொடியேற்றல்
- பாடசாலைக் கொடியேற்றல்
- விருந்தினர்களை விழா மண்டபத்திற்கு அழைத்து வருதல்
- மங்கல விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- வரவேற்பு நடனம்
- வரவேற்புரை (ஆசிரியர் – திரு.க.சிவமூர்த்தி)
- பரிசில் நாள் அறிக்கை
- பரிசில் வழங்கல்
- **கலை நிகழ்வுகள்**
  - ✓ தனிநடனம் - தரம் - 01 மாணவி
  - ✓ பேச்சு - தரம் - 02 மாணவன்
  - ✓ கரகாட்டம் - தரம் - 03, 04 மாணவிகள்
  - ✓ கௌரவ விருந்தினர் உரை
  - ✓ பேச்சு (ஆங்கிலம்) - தரம் - 02 மாணவி
  - ✓ செம்பு நடனம் - தரம் - 01 மாணவிகள்
  - ✓ ஒயிலாட்டம் - தரம் - 01, 02 மாணவர்கள்
  - ✓ காவடியாட்டம் - தரம் - 03, 04, 05 மாணவர்கள்
  - ✓ சிறப்பு விருந்தினர் உரை
  - ✓ கவிதை (ஆங்கிலம்) - தரம் - 01 மாணவி
  - ✓ கிராமிய நடனம் - தரம் - 01, 02 மாணவர்கள்
  - ✓ பேச்சு (ஆங்கிலம்) - தரம் - 05 மாணவன்
  - ✓ பாடல் (சிங்களம்) - தரம் - 03, 04 மாணவர்கள்
  - ✓ பிரதம விருந்தினர் உரை
  - ✓ குழு நடனம் - தரம் - 04, 05 மாணவிகள்
  - ✓ நன்றியுரை (ஆசிரியர் - திருமதி.ச.கலானந்தன்)
  - ✓ கொடியிறக்கம்

# யா/ கைதடி கலைவாணி வித்தியாலயம், கைதடி.

## பாடசாலைக் கீதம்

வாழிய கைதடி கலைவாணியே
வாழிய நீடுழி தரணியிலே

(வாழிய...)

கற்க அது தக நிற்க எனும்
மகுட வாசகம் ஓங்கிடவே

(வாழிய...)

கலைமகள் அலைமகள் மலைமகள் என
நீலம் மஞ்சள் சிவப்பு என்ற
மூலவர்ணங்கள் மூன்றும் இல்லங்களாய்
கல்வி செல்வம் வீரம் பெற்றே வாழியவே.

(வாழிய...)

அன்னையும் பிதாவும் எம் கடவுள்
எழுத்தறிவித்தவன் எம் இறைவன்
என்பனறிய எமக்குரைத்த
உன்னையும் வாழ்த்தி வணங்கிடவே.

(வாழிய...)

இயற்றியவர் பெயர்
திரு.பண்டாரி-செல்லத்துரை
(முன்னாள் அதிபர்)

# யா/ கைதடி கலைவாணி வித்தியாலயம்
# அதிபரின் பரிசில் நாள் அறிக்கை
## (18.07.2015 – 03.12.2016 வரை)

எல்லாம் வல்ல எம்பெருமானின் பாதக்கமலங்களைப் பணிந்தேற்றி, கைதடிப் பிரதேசத்தின் வரலாற்றுப் பெருமை மிக்க கைதடி கலைவாணி வித்தியாலயத்தின் தோற்றத்திற்கு வித்திட்டுழைத்தோருக்குச் சிரந்தாழ்த்தி வணங்கி, 156 ஆண்டுகளாக இம்மண்ணின் மைந்தர்களுக்கு ஒழுக்க விழுமியங்களுடன் கூடிய சிறந்த நல்லறிவையும், காலத்திற்கேற்ப பொருத்தப்பாடுடைய நற்பிரஜைகளை உருவாக்கி, பெருமிதத்துடன் தலைநிமிர்ந்து நிற்கும் எம் வித்தியாலய அன்னைக்குச் சமூகம் சார்பில் சிரந்தாழ்த்திய வணக்கத்தைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடை கின்றேன்.

யா/ கைதடி கலைவாணி வித்தியாலயம் 156 ஆவது ஆண்டு அகவையைப் பூர்த்திசெய்து பூரித்து நிற்கும் இந்நாளிலே 2016 ஆம் ஆண்டிற்கான பரிசில்நாள் நிகழ்வினை கொண்டாடுவதில் மனமகிழ்வடைகின்றேன். இந்த இனிய நன்னாளிலே மாணவச் செல்வங்களுக்கு பரிசில்களை வழங்கிக் கௌரவிக்க பிரதம விருந்தினராக வருகைதந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் பேரன்புக்கும் பெருமதிப்பிற்குமுரிய தென்மராட்சிக் கல்விவலயத்தின் வலயக்கல்விப் பணிப்பாளர் உயர்திரு. சுப்பிரமணியம் கிருஷ்ணகுமார் அவர்களே! சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் முன்னாள் இப்பாடசாலையின் அதிபர் திரு.ப.செல்லத்துரை அவர்களே! கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் திருமதி. கஜேந்தினி மகிந்தன் அவர்களே!

பிரதிக்கல்விப்பணிப்பாளர்களே!, கோட்டக்கல்விப்பணிப்பாளர் அவர்களே!, உதவிக்கல்விப்பணிப்பாளர்களே!, சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களே!, வலயக்கல்வி அலுவலக மற்றும் கோட்டக்கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களே!, அயற்பாடசாலையின் அதிபர்களே, ஆசிரியர்களே, எமது பாடசாலையின் அன்பான ஆசிரியர்களே, பழைய மாணவர்களே, பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப் பினர்களே, எமது பாடசாலையின் புலம்பெயர் உறவுகளே!, பாடசாலை நலன் விரும்பிகளே!, எம்மினிய பெற்றோர்களே!, அன்பான மாணவச் செல்வங்களே!, உங்கள் அனைவருக்கும் அன்பான இனிய வணக்கங்களைக் கூறி வரவேற்பதில் மகிழ்வடைகின்றேன்.

பிரதம விருந்தினர் அவர்களே!

இன்றைய இப்பரிசளிப்பு விழா நிகழ்விற்கு முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் பெருமதிப்பிற்குரிய தென்மராட்சிக் கல்விவலயத்தின் கல்விப்பணிப்பாளர் அவர்களே! விஞ்ஞானப் பட்டதாரியான தாங்கள் சிறந்த கல்விமானாகக் கல்விப் புலத்தினுள் நுழைந்து, 1999ம் ஆண்டிலே இலங்கை கல்வி நிர்வாக சேவையில் நியமனம் பெற்று வடக்கு - கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சில் உதவிப்பணிப்பாளராகவும், பின் பிரதிப் பணிப்பாளராகவும் கடமையாற்றி அதன் தொடர்ச்சியாக 01.01.2007 முதல் வடமாகாணக் கல்வி அமைச்சில் பிரதிக்கல்விப்பணிப்பாளர் (நிர்வாகம்) ஆகவும், அதன்பின் முல்லைத்தீவு வலயக்கல்விப்பணிப்பாளராகவும் சேவை யாற்றிய அனுபவத்திரட்சியுடன் 15.01.2013 முதல் தென்மராட்சிக் கல்வி வலயத்தைப் பொறுப்பேற்று, வடமாகாணத்தில் தென்மராட்சிக் கல்வி வலயத்தினை முத்திரை பதிக்கச்செய்த "செயல்வீரன்" என்றால் மிகை யேதுமில்லை. போருக்குப் பிந்திய யாழ்ப்பாணக் குடாநாட்டின் கல்வி நிலைச் சரிவைத் தென்மராட்சி வலயத்தில் கட்டிநிமிர்த்திய பெருமை தங்களையே சாரும். பாடசாலை ரீதியான தரிசிப்புக்கள், பெற்றோர், சமூகத்துடனான கலந்துரையாடல் செயற்பாடுகள் மூலம் பின்தங்கிய பிரதேசங்களின் கல்வி நிலையை மேம்படுத்த அயராது உழைத்தீர்கள். அத்துடன் புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. (சா/த) மற்றும் க.பொ.த.(உ/த) பரீட்சைகளில் எமது வலயம் முன்னிலையில் நிற்பதற்கு தங்களின் அர்ப்பணிப்புமிக்க சேவையே காரணமெனலாம். இதற்காக வலய ஆளணியினர், பாடஆசிரியர்கள், பாடசாலை அதிபர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பல்வேறு நிலைகளில் ஆராய்ந்து பரிகாரம் தேடிக்கொடுத்த பெருமையால் தென்மராட்சி மண் கல்வியில் முத்திரை பதிக்க அரும்பணியாற்றுகின்றீர்கள். அதுமட்டுமன்றி ஆசிரியர்கள் மாணவர்களின் இணைக்கலைத்திட்ட விருத்திக்காக முழுநிலா கலை நிகழ்வுகள், ஏழிசை மாலை, நாதநர்த்தனம், தென்னருவி வர்த்தகக் கண்காட்சி, வர்ண இரவுகள், சித்திரக் கண்காட்சி போன்றவற்றைத் திறம்பட முன்னெடுக்கும் நேர்த்தி அற்புதமானது.

இதற்கும் மேலாக, மாணவர்களுக்கான கற்றல் கையேடுகள், தொழில் வழிகாட்டல் மற்றும் பாடத்தெரிவு நுட்பங்கள், புலமைப்பரிசில் மாண வர் கையேடுகள், பாடரீதியான வழிகாட்டல்கள், "சிறகுகள்", "தென்னவள்" ஆகிய சஞ்சிகை வெளியீடுகள், முதலியவற்றை வருடாந்தம் வெளியீடு செய்து வருவது போற்றுதற்குரிய அம்சமாகும். மேலும் அதிபர்களுக்கான முகாமைத்

துவப் பயிற்சிகள், நிர்வாகக் கையேடுகள் போன்றவற்றை வழங்கி, சிறந்த முகாமைத்துவப் பரம்பலை உருவாக்கிய பெருமையும் தங்களுக்குரிய தேயாகும்.

அத்துடன் "மாணவர் பாராளுமன்றச் செயற்பாடுகளை" வினைத் திறனான முறையில் முன்னெடுத்த பெருமையும், அதனைத் தேசிய மட்டத்தில் பேசப்படுமளவிற்கு உரமூட்டியவரும் நீங்கள்தான் என்றால் மறுப்பதற் கில்லை. பாடசாலைகளின் பௌதீக வளங்கள், ஆசிரியர் சீராக்கல் முதலிய வற்றையும் உரிய முறையில் நெறிப்படுத்தி கல்வி எழுச்சிக்கு காரண கர்த்தாவாக விளங்கும் தங்களை இந்நேரத்தில் வருக, வருகவென வர வேற்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைவதோடு, புரட்டாதித் திங்கள் 9ம் நாள் மணி விழாக்காணும் தாங்கள் பணிஓய்வின் பின்னரும் கல்விக்குக் கலங்கரை விளக்காகத் திகழவேண்டுமெனக் கேட்டுகொள்வதோடு, நீண்ட ஆயுளும், தேகசுகமும் தந்தருள எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சிறப்பு விருந்தினர் அவர்களே!

எமது பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவிற்கு வருகை தந்திருக்கும் திரு.ப.செல்லத்துரை அவர்கள் சிறப்புவிருந்தினராக கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கின்றார். இவர் சுமார் 22 வருடங்களிற்கு மேலாக இப்பாடசாலைக்காகத் தன்னை அர்ப்பணித்துச் சேவைசெய்துள்ளார். குறிப்பாக 1988 ம் ஆண்டு தொடக்கம் 2011ம் ஆண்டு வரை அதிபராகச் சேவை செய்ததன் விளைவாகவே இப்பாடசாலை மூன்று பிரதான கட்டடங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கக் காரணமானவர் என்றால் அதில் ஐயமேது மில்லை. பாடசாலை மாணவர்களுக்கான இலவச ஆட்டோ போக்குவரத்து சேவைக்குரிய பயணத்தை தொடக்கி வைக்கும் போது அதற்குரிய ஏற்பாடு களைச் செய்து வழங்கியவர். தனது கிராமத்திற்குச் சேவை செய்யவேண்டு மென்ற பெருவிருப்புடையவர். அதன் பயனாக இன்று "கைதடி நட்புறவுக் கழகத்தின்" தலைவராகச் செயற்பட்டுவருகின்றார். இவ்வாறு தன்னலம் பாராது ஓய்வுக்காலத்திலும் சேவையாற்றும் பண்பாளர் எமது விழாவில் கலந்து சிறப்பிப்பதையிட்டு மகிழ்வடைவதோடு, அவரை வருக! வருகவென வர வேற்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

## கௌரவ விருந்தினர் அவர்கள்!

இன்றைய இந்நிகழ்விலே கௌரவ விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் பிரதியதிபர் திருமதி.கஜேந்தினி மகிந்தன் அவர்கள் 2013ம் ஆண்டிலிருந்து இப்பாடசாலையின் ஆரம்பக்கல்வி ஆசிரியராகப் பணியாற்றிய பெருமைக்குரியவர். இவர் தன்னுடைய காலத்தில் கற்பித்தலுடன் மட்டுமல்லாமல் நிர்வாகத்திலும் முழு ஈடுபாட்டுடன் பங்களித்தவர். இதன் பயனாக இன்று அதிபர் சேவை - தரம் - 3இல் சித்தியடைந்து பிரதியதிபராகப் பதவியுயர்வு பெற்றுள்ள இவரை வருக! வருகவென வரவேற்பதில் மனநிறைவடைகின்றேன்.

➢ ***மாணவர்கள் :-*** எமது பாடசாலையில் தரம் - 1 தொடக்கம் தரம் - 5 வரை மொத்தம் 48 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இதில் ஆண்கள் 23 பேரும் பெண்கள் 25 பேரும் அடங்குவர். பெரும்பாலும் கூலித்தொழிலையே வருமான ஆதார மாகக் கொண்டிருக்கும் பெற்றோர்களின் பிள்ளைகளே இங்கு கல்வி கற்கின்றனர். இந்நிலையானது மாணவர் களின் கல்வியிலும் தாக்கம் செலுத்துகின்றது. திட்ட மிடும் கல்விச் செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் பெற் றோரின் நிலை மிகவும் தாக்கத்தைச் செலுத்துவதால் திட்டமிடும் இலக்கை அடைவதில் சவால்களை எதிர் நோக்கவேண்டியுள்ளது. அத்துடன் பாடசாலை நேரத் திற்கு அப்பால் மாணவர்களின் கற்றல் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவதில் பெற்றோர்கள் தவறிவிடும் நிலை மாணவர் அடைவு மட்டத்தை உயர்த்துவதிலும் தாக் கம் செலுத்துகின்றது. இங்கு கல்வி பயில்கின்ற பிள் ளைகளில் அநேகர் இந்துமதத்தவராக இருப்பதுடன் ஒரு சிலர் கத்தோலிக்கராகவும் உள்ளனர்.

➢ ***ஆசிரிய ஆளணியினர்:-***

எமது பாடசாலையில் தற்பொழுது 05 ஆசிரியர்கள் கட மையாற்றி வருகின்றனர். இவர்களில் ஆண் ஆசிரியர் ஒருவரும், 04 பெண் ஆசிரியர்களும் உள்ளடங்குகின் றனர். இதில் ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் நால்வரும் விஞ்ஞான பாட ஆசிரியர் ஒருவரும் சேவையாற்று கின்றனர்.

எமக்கு அனுமதிக்கப்பட்ட ஆசிரியர் எண்ணிக் கையில் ஆரம்பக் கல்வி ஆசிரியர் ஒருவரும் ஆரம்பக் கல்வி ஆங்கிலம் ஒருவருமாக 02 பேர் வெற்றிடமாக உள்ளமை மாணவர் கல்விச் செயற்பாட்டிற்கு தடையாக உள்ளமை யாவரும் அறிந்ததேயாகும். இவ் ஆசிரியர் பற்றாக்குறைகளை விரைவில் நீக்கி உதவுமாறு வலயக்கல்விப்பணிப்பாளரிடம் விநயமாகக் கேட்டு நிற்கின்றேன்.

- ***இப்பாடசாலையில் பணியாற்றி இடமாற்றம் பெற்றோர் :-***
- ***அதிபர் இடமாற்றம் :-***

2011.12.05 தொடக்கம் இப்பாடசாலையில் பணி யாற்றிய திரு. நாகலிங்கம் கருணாகரன் அவர்கள் 2012.01.26 இல் SLPS-2-II பதவியுயர்வைப் பெற்ற தோடு, 2016.06.09 வரை இப்பாடசாலையில் அதிப ராகக் கடமையாற்றி, யா/ கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்திற்கு இட மாற்றம் பெற்றுச் சென்ற இவர், இப்பாடசாலைக்கு ஆற்றிய பணிகள் பாடசாலை வர லாற்றில் ஒருமைல் கல்லாக அமைந்துள்ளமையை யாரும் எளிதில் மறந்துவிட முடியாது. அவர் ஆற்றிய பணிகளின் சிறப்பை பாடசாலைச் சமூகம் நன்றியுடன் நினைவு கூருகின்றது.

- ***ஆசிரியர் இடமாற்றம் :-***

22.02.2013 தொடக்கம் ஆரம்பக்கல்வி ஆசிரியராக இப் பாடசாலையில் பணியாற்றிய திருமதி. கஜேந்தினி. மகிந்தன் அவர்கள் 09.05.2016 முதல் அதிபர் சேவை தரம் - 3 இற்கு நியமிக்கப்பட்டு, 02.01.2017 முதல் யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கு பிரதியதிபராக பதவியுயர்வு பெற்றுச் சென்றுள்ளார். அவர் இப்பாடசா லையில் ஆற்றிய பணிகளை மனதாரப் பாராட்டுவ தோடு, மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்றுயர வாழ்த்துகின்றோம்.

- ***புதிதாக இணைந்துகொண்டோர் :-***

முன்னைய அதிபர் இடமாற்றம் பெற்றுச்சென்ற பின்னர் சுமார் நான்கு மாதங்களாகப் பல்வேறு நெருக்கடி களுக்கு மத்தியில் உபஅதிபர் திரு. க. சிவமூர்த்தி அவர் கள் பாடசாலைக் கடமைகளை நிறைவேற்றிக் கொண்டிருந்த பொழுது அவரது பணிச்சுமையைக் குறைக்கும் முகமாக 05.10.2016 முதல் திரு. சிவபாதசுந்தரம் சிவகுமார் ஆகிய நான் புதிய அதிபராக இப்பாடசாலைக்கு நியமனம் பெற்று கடமைகளைப் பொறுப்பேற்றேன். இங்கு எனது அதிபர் நியமனத்தை

ஏற்ற பாடசாலைச் சமூகத்திற்கு என்றும்நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

- ***வாழ்த்துக்கள் :-*** எமது பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி வகை - 2 பாடசாலையான யா/ கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்திற்கு அதிபராக இடமாற்றம் பெற்றுச் சென்ற திரு. நாகலிங்கம் கருணாகரன் அவர்களும். இப்பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றி, பிரதிய திபராகப் பதவியுயர்வு பெற்றுச் சென்ற திருமதி. கஜந்தினி மகிந்தன் அவர்களும் மேன்மேலும் பல பதவியுயர்வுகளைப் பெற்று நலமுடன் வாழ வாழ்த்து கின்றோம்.

- ***முகாமைத்துவக் குழு :-***

ஆரம்பப் பாடசாலையான யா/ கைதடி கலைவாணி வித்தியாலயத்தின் வருடாந்தச் செயற்பாடுகளைத் திட்ட மிட்டு நிறைவேற்றுவதில் முகாமைத்துவக் குழு சிறப் பாகப் பணியாற்றி வருகின்றது. குறிப்பாகப் பாடசாலை மாணவர்களின் கல்வி அபிவிருத்தி, இணைபாட விதான செயற்பாடுகள், பாடசாலைத்தர மேம்பாடு, பௌதீகவள அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு நடவடிக் கைகளை அர்ப்பணிப்புடன் மேற்கொண்டு வருவதை யிட்டு பேருவுகையடைவதோடு, அதற்காகப் பணியாற் றும் ஆசிரியர்களை மனதாரப் பாராட்டுகின்றேன்.

- ***ஆசிரிய ஆளணி :-***

எமது பாடசாலையில் தற்போது ஐந்து ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். அனுமதிக்கப்பட்ட ஆளணி யினரில் ஆரம்பக் கல்வி ஆசிரியர் ஒருவரும், ஆங்கிலப் பாட ஆசிரியர் ஒருவரும் எமக்குப் பற்றாக்குறையாக வேயுள்ளனர். பின் தங்கிய மற்றும் கிராமிய மட்டப் பாடசாலையான எமக்கு இவ்வாசிரியர் பற்றாக் குறைகளை உரிய முறையில் சீர்செய்து நிரப்ப வேண்டிய அவசியமுள்ளது. இது மாணவர் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டைப் பாதித்து வருவதை யாவரும் உணர்ந்துகொள்வர்.

## ➢ கல்விச் செயற்பாடுகள் :-

எமது ஆசிரியர் குழாத்தினரிடம் காணப்படும் ஒற்று மையுணர்வு, கூடித் தீர்மானம் எடுக்கும் திறன், அர்ப் பணிப்புடன் சேவையாற்றும் மனப்பாங்கு, விடா முயற்சி, இலக்கு நோக்கிய பயணிப்பு, மாணவர்களிடம் காட்டும் பரிவு, இரக்கம், கருணை இவை யாவும் ஒன்று சேர்ந்து கடந்த 2016 ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய 06 மாண வர்களும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று 100% சித்தியைப் பெற்றுத்தந்துள்ளமை பாராட்டுக்குரி யதாகும். இம் முயற்சியில் வெற்றிகொண்ட திருமதி. சரோசினி கலானந்தன் ஆசிரியர் அவர்களை இச் சந்தர்ப்பத்தில் பாராட்டுவதோடு, சித்தியடைந்த மாண வச் செல்வங்களையும் வாழ்த்துகின்றேன். இம்முறை அனைத்து மாணவர்களும் 100 புள்ளிகளுக்கு மேல் பெறவேண்டும் என்ற இலக்கு நோக்கிப் பயணிக் கின்றோம். அதிலும் வெற்றி நிச்சயம் கிட்டும் என்றே எதிர்பார்க்கின்றோம்.

## ➢ பாடசாலை அபிவிருத்திச் சங்கம் :-

எமது பாடசாலையில் பழைய மாணவர் சங்கம் இன்னும் உருவாக்கப்படவில்லை. ஆயினும் பாடசா லையின் ஒவ்வொரு அசைவிலும் தோளோடு தோள் நின்று, நாம் திட்டமிடும் காரியங்களைக் கனகச்சிதமாக முடிப்பதற்குப் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப் பினர்கள் காட்டும் அக்கறை பாராட்டப்படவேண்டி யதாகும். பாடசாலையின் விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள் மற்றும் விஷேட தினங்களை நடாத்து வதற்குரிய சகல ஒத்தாசைகளையும் வழங்குகின்ற உறுப்பினர்கள் என்றும் பாராட்டப்பட வேண்டியவர் களாவர். இவர்களுடன் "சரஸ்வதி சனசமூக நிலை யத்தினரும்" எமக்கான சகல உதவிகளையும் எந்தவித மறுப்புமின்றி செய்து உதவுகின்றனர். இந்நிலைய உறுப்பினர்கள் அனைவரையும் இச்சமயத்தில் மன தாரப் பாராட்டுகின்றேன்.

- ***உணவு விநியோகச் செயற்பாடுகள் :-***

உலக உணவுத்திட்ட அமைப்பினால் செயற்படுத்தப் படும் மதிய உணவுத் திட்டமானது எமது பாடசாலை மாணவர்களைப் பொறுத்தவரையில் மிக வரப்பிர சாதமான ஒன்றாகும். இத்திட்டத்தினால் மாணவர்க ளிடையே போசாக்கு மட்டமும் தென்பும் அதிகரிப்பத னால் கற்றலில் நாட்டம் கொள்வதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. அந்த வகையில் இத்திட்டத்தை பல நெருக்கடியின் மத்தியிலும் இடைவிடாது செயற்படுத்தி வரும் உலக உணவுத் திட்டத்திற்கு நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இத்திட்டத்தை எமது பாடசாலையில் மிகச் சிறப்பாக நடைமுறைப்படுத்திவரும் உணவூட்டல் குழுவின் பொறுப்பாசிரியர் திரு.க.சிவமூர்த்தி அவர்க ளுக்கும், தொண்டு அடிப்படையில் உணவினை நாளாந்தம் சுவைபடச் சமைத்து வழங்கி வரும் சமையலாளர் திருமதி. சுரேஸ்குமார் சாமளா அவர்க ளுக்கும் மனமார்ந்த நன்றிகளையும், பாராட்டுக்க ளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

- ***மன்றங்களின் செயற்பாடுகள் :-***

***இந்து மாணவர் மன்றம் :-***

இம்மன்றமானது பிரதி வெள்ளிக்கிழமை தோறும் காலைப் பிரார்த்தனை ஒழுங்குகளை மேற்கொள் வதோடு, அதில் மாணவர்களிடமுள்ள சமயம் சார்ந்த விடயங்களை வெளிக்கொணரும் செயற்பாட்டில் ஈடு பட்டு வருகின்றது. அத்துடன் கடந்த வருடத்தில் விஜய தசமி விழா, வித்தியாரம்ப நிகழ்வுகளையும், இவ் வருடம் தைப்பொங்கல் விழாவினையும் மிகச் சிறப்பாக நடாத்தியுள்ளது. இதற்கு மாணவர்களை வழிப்படுத்திய ஆசிரியர்களும், அதனை நிறைவேற்ற ஒத்துழைத்த பெற்றோர்களும் போற்றப்படவேண்டியவர்களாவர். இதன் பொறுப்பாசிரியராக திரு.க.சிவமூர்த்தி அவர்க ளும், தலைவராக செல்வி.ம.வர்ணயா அவர்களும், செயலாளராக செல்வி.செ.கிஷாயினி ஆகியோர் சிறப் பாகச் செயற்படுகின்றனர்.

***சுற்றாடல் கழகம்:*** சுற்றாடல் கழகமானது தன்னையும் தன்னைச்சூழவுள்ள இயற்கை, பௌதீக சூழல்களின் பாதுகாப்பில் அதீத அக்கறைகொண்டு செயற்பட்டு வருகின்றது. இதன் தலைவராக செல்வி.ஜெ.டிலானியும் செயலாளராக செல்வன்.ஜெ.டேனுஜன் அவர்களும், பொறுப்பாசிரியராக திருமதி.சி. சேயோன் அவர்களும் செயற்பட்டு வருகின்றனர். இக்கழகத்தினால் பாடசாலையில் மரங்கள் நாட்டிப் பராமரிக்கப்படுவதோடு, கழிவுகளை உரியவாறு அகற்றும் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுவது பாராட்டுக்குரிய விடயமாகும்.

***ஆரம்பக் கல்வி மாணவர் மன்றம் :***

இம்மன்றமானது தலைவராக செல்வன்.ரி.மதுசன், செயலாளராக செல்வி.ம. வர்ணயா ஆகியோரைக் கொண்டு பொறுப்பாசிரியர் திருமதி.ச.கலானந்தன் அவர்களின் வழிகாட்டலில் இயங்கிவருகின்றது. இம்மன்றம் ஆரம்பக்கல்வி மாணவர்களிடம் இலைமறை காயாகவுள்ள ஆற்றல்களை வெளிக்கொணர்வதில் சிறப்பாகச் செயற்பட்டுவருவதைக் கண்டு மகிழ்கின்றோம்.

***.2016ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பௌதீகவள அபிவிருத்திகள்:-***

"அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்குப்புறத்திலுள்ள 50' X 25' கொண்ட கட்டடத்திற்கான கூரைத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டதோடு, அதன் குறிப்பிட்ட ஒரு பகு திக்கு வர்ணப்பூச்சு வேலைகளும் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக கூரைத் திருத்தத்திற்கு ரூபா.195,365.00 உம், வர்ணப்பூச்சுக்கு ரூபா.64,070.00 உம் ஒதுக்கப்பட்டு, வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

"அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குடிநீர் தொட்டி மறுசீரமைப்புக்கு ரூபா. 19,799.85 ஒதுக்கப்பட்டு அவையும் பூர்த்தி செய்யப்பட்டன.

இவற்றுக்கான நிதிகளை ஒதுக்கீடு செய்து உதவிய வலயக்கல்விப் பணிப்பாளருக்கும், கணக்காளர்

மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கும் நன்றி களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அந்த நிகழ்ச்சித் திட்ட வேலைகளைத் திறம்பட முன்னெடுத்த உபஅதிபர் திரு.க.சிவமூர்த்தி அவர்களையும் மனதாரப் பாராட்டு கின்றேன்.

➢ ***அன்பான பெற்றோர்களே !***

இன்றைய பரிசில் நாளில் பெற்றோர்களாகிய உங்க ளுக்கும் சில விடயங்களைக் கூறவேண்டும்.

- உங்களது பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பான விட யங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
- உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பாகப் பாட சாலையுடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணுங் கள்.
- உங்கள் பிள்ளைகள் இணைபாடவிதானச் செயற்பா டுகளில் பங்கெடுப்பதை உறுதிப்படுத்தி, அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.
- பாடசாலைக்கு அழைக்கப்படும் நேரங்களில் பிற வேலைகளைப் புறந்தள்ளி, பிள்ளைகளின் நல னுக்காகத் தவறாது பாடசாலைக்கு உரிய நேரத்திற்குச் சமூகமளியுங்கள்.
- பிள்ளைகளின் உடற்சுத்தத்தின் மீதும், நேர்த்தியான சீருடை அணிவதிலும், தலைமுடியைச் சீராக்குவதிலும் கவனஞ் செலுத்துங்கள்.
- பிள்ளைகளின் பிரச்சினைகளையும், தேவைகளையும் அக்கறையுடன் செவிசாய்த்து ஆவன செய்யுங்கள்.
- மாணவர்கள் தவறாது தினமும் பாடசாலைக்குச் சமூக மளிப்பதை உறுதிப்படுத்துங்கள்.
- பிள்ளைகள் வீட்டிலே கற்பதை ஒழுங்குமுறைப்படுத்தி, கற்கும் நேரத்தில் அவர்களின் அருகிலிருந்து ஊக்கப் படுத்துங்கள்.
- பிள்ளைகளிடம் சமய ஈடுபாட்டை ஊக்குவித்து, ஒழுக் கத்தைப் பேணுவதன் மூலம் ஆரோக்கியமான சமூ கத்தை உருவாக்குங்கள்.

## *நிறைவேற்றப்படவேண்டிய பௌதீகவள அபிவிருத்தித் திட்டங்கள் :-*

ஆரம்பப் பாடசாலையான யா/ கைதடி கலைவாணி வித்தியாலயத்திற்கு பல்வேறு தேவைப்பாடுகள் உள் ளன. அவையாவன :

- பாடங்களுக்குத் தேவையான உரிய ஆசிரியர்களை நியமித்தல் வேண்டும்.
- உள்ளக சிறுவர் விளையாட்டு முற்றம் நவீன முறை யிலான உபகரணத் தொகுதிகளால் பூர்த்தி செய்யப் படவேண்டும்.
- பாடசாலையின் வகுப்பறைக் கட்டடங்கள் வர்ணம் பூசி அழகுபடுத்துதல்.
- ஆண் மற்றும் பெண் ஆசிரியர்களுக்கான மலசலகூடத் தொகுதியொன்றை அமைத்தல்.
- பிள்ளைகளின் (ஆண், பெண்) மலசல கூடங்களை நவீன முறையில் மாபிள் பதித்து புனரமைப்புச் செய்தல்.
- வகுப்பறைத் தளபாடங்களுக்கு வர்ணம் பூசி கவின் நிலைப்படுத்துதல்.
- பாசாலையின் கிழக்குப்புறத்திலுள்ள சுமார் 90அடி நீளமான வேலியை எல்லைப்படுத்தி பாதுகாப்பான மதில் அமைத்தல்.
- சமையலறையைத் திருத்தம் செய்து புனரமைத்தல்.
- பாடசாலை நூலகத்திற்குரிய தளபாடங்கள், அலுமாரி கள் மற்றும் சிறுவர் நூல்களைப் பெற்றுக்கொள்ளல்.
- ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்குரிய கணினி ஆய்வு கூடமொன்றை உருவாக்கி மாவர்களின் கற்றலை இலபடுத்துவதனூடாக நவீன உலகிற்கு தயார்செய்தல்.
- இப்பாடசாலைக்கு கலையரங்கு, செயற்பாட்டு அறைகள் (Activity Rooms), வகுப்பறைகளைக் கொண்ட 110'X25' கொண்ட மாடிக் கட்டடத்தை அமைத்தல்.
- கொங்கிறீட்டிலான பாடசாலை நுழைவாயில் ஒன்றை அமைத்து பாடசாலையை அழகுபடுத்தல்.

போன்ற அபிவிருத்தித் திட்டங்களை நிறை வேற்ற வேண்டிய தேவையுள்ளது.

# நன்றியுரை

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் - உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு."

என்ற தெய்வப் புலவரின் வாக்குக்கேற்ப இன்றைய எமது பாடசாலை பரிசளிப்பு விழாவிற்கு பல்வேறு வேலைச் சுமைகளுக்கு மத்தியிலும் பிரதம விருந்தினராக வருகைதந்து இவ்விழாவைச் சிறப்பித்துக் கொண்டிருக்கும் தென்மராட்சிக் கல்வி வலயத்தின் கல்விப்பணிப்பாளர் உயர்திரு. சுப்பிரமணியம் கிருஷ்ணகுமார் அவர்களுக்கு எமது பாடசாலைச் சமூகம் சார்பான இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் கைதடி நட்புறவுக் கழகத்தின் தலைவரும், முன்னாள் இப்பாடசாலையின் அதிபருமான திருவாளர்.ப.செல்லத்துரை அவர்களுக்கும், கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் பிரதியதிபரும், முன்னாள் இப்பாடசாலையின் ஆசிரியருமான திருமதி. கஜேந்தினி மகிந்தன் அவர்களுக்கும் வித்தயாலயச் சமூகத்தினர் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும், இந்நிகழ்விலே கலந்துகொண்டு சிறப்பித்த பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள், குறிப்பாக சரஸ்வதி சனசமூக நிலையத்தினருக்கும் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.


மற்றும் இந்நிகழ்வினைச் சிறந்த முறையில் ஒழுங்கமைக்கும் முகமாக எமது ஆசிரியர்களிடம் குறித்தொதுக்கப்பட்ட பொறுப்புக்களைச் செவ்வனே நிறைவேற்றி, விழாவைச் சிறப்புற ஒழுங்கமைத்தமைக்கு எமது ஆசிரியர்களுக்கும் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன் இப்பரிசளிப்பு விழா நிகழ்வினை அணிசெய்த, மாணவர் நிகழ்வு களைப் பழக்கி ஒத்துழைத்த ஆசிரியர்களுக்கும், உதவியாசிரியருக்கும், பெற்றோருக்கும் நன்றிகள் உரித்தாகட்டும்.

மேலும், இந்நிகழ்விற்காக சிறந்த முறையில் ஒளி, ஒலி அமைப்பினை

வழங்கிக் கொண்டிருப்பவர்களுக்கும், தகரப்பந்தல், கதிரைகளை வழங்கி உதவியவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும், பரிசளிப்பு விழாவிற்குரிய புத்தகங்கள், உபகரணங்களை அன்பளிப்புச் செய்த அன்புள்ளங்களுக்கும், சிற்றுண்டி வகைகளை வழங்கி உதவியவர்களுக்கும், மற்றும் விழா சிறப்புறப் பல்வேறு வகையிலும் பங்களித்த உறுப்பினர்களுக்கும், நன்றிகளைக் கூறிக்கொள்வதோடு இவ்வளவு நேரமும் அமைதியாகவிருந்து இந்நிகழ்வினைச் செவ்வனே நடாத்த ஒத்துழைத்த எமது அருமைச் செல்வங்களுக்கும், மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டு எனது இவ் அதிபர் அறிக்கையை நிறைவு செய்கின்றேன்.

"நன்றி"
வணக்கம்



# பாடசாலையிலுள்ள குழுக்களின் விபரம்

❖ *பாடசாலைக் கல்வி வசதிகள் வழங்கும் குழு :-*

| | | |
|---|---|---|
| திரு.சி.சிவகுமார் | - | அதிபர் |
| திரு.க.சிவமூர்த்தி | - | ஆசிரியர் |
| திருமதி.ச.கலானந்தன் | - | ஆசிரியர் |
| செல்வி. த.சுந்தரலிங்கம் | - | ஆசிரியர் |
| செல்வன்.ரி.மதுஷன் | - | மாணவன் |
| செல்வி.ம.வர்னயா | - | மாணவி |
| திருமதி.இ.அலக்சனா | - | பெற்றோர் |
| திருமதி.கே.சுமித்திரா | - | பெற்றோர் |

❖ *தொழினுட்ப மதிப்பீட்டுக் குழு* (TEC)

| | | |
|---|---|---|
| திரு.க.சிவமூர்த்தி | - | ஆசிரியர் |
| திருமதி.சி.சேயோன் | - | ஆசிரியர் |
| திருமதி.சி.கிருஸ்ணமோகன் | - | ஆசிரியர் |

❖ *பாடசாலை முகாமைத்துவக் குழு* (SMT)

| | | |
|---|---|---|
| திரு.சி.சிவகுமார் | - | அதிபர் |
| திரு.க.சிவமூர்த்தி | - | ஆசிரியர் |
| திருமதி.ச.கலானந்தன் | - | ஆசிரியர் |
| திருமதி.சி.சேயோன் | - | ஆசிரியர் |

❖. *பாடசாலை சுகாதார மேம்பாட்டுக் குழு*

| | | |
|---|---|---|
| திரு.சி.சிவகுமார் | - | அதிபர் |
| திரு.து.கண்ணதாசன் | - | பொதுச் சுகாதாரப் பரிசோதகர் |
| திரு.க.சிவமூர்த்தி | - | ஆசிரியர் |
| திருமதி.சி.கிருஸ்ணமோகன் | - | ஆசிரியர் |
| திருமதி.சி.சேயோன் | - | ஆசிரியர் |
| செல்வி.ஜெ.டிலானி | - | மாணவி |
| செல்வி.ச.மபிஷா | - | மாணவி |
| செல்வன்.வி.தர்ஷனன் | - | மாணவன் |
| செல்வன்.ர.ரம்சிகன் | - | மாணவன் |

❖ *பாடசாலை அனர்த்தப் பாதுகாப்புக் குழு*

| | | |
|---|---|---|
| திரு.சி.சிவகுமார் | - | அதிபர் |
| திரு.க.சிவமூர்த்தி | - | ஆசிரியர் |
| திருமதி.ச.கலானந்தன் | - | ஆசிரியர் |
| திருமதி.ஜெ.சிறீக்கா | - | பெற்றோர் |
| திரு.சி.பாஸ்கரன் | - | பெற்றோர் |
| திருமதி.ரி.சுமணலதா | - | பெற்றோர் |
| செல்வன்.ஜெ.ஷஜீன் | - | மாணவர் |
| செல்வி.சு.அட்ஷயா | - | மாணவர் |
| திருமதி.ர.றஜிகலா | - | பழைய மாணவர் |
| திருமதி.அ.பானுஜா | - | பழைய மாணவர் |

❖ *பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்திச் செயற்றிட்டக் குழு*(SBTD)

| | | |
|---|---|---|
| திரு.சி.சிவகுமார் | - | அதிபர் |
| திரு.க.சிவமூர்த்தி | - | ஆசிரியர் |
| திருமதி.ச.கலானந்தன் | - | ஆசிரியர் |
| திருமதி.சி.சேயோன் | - | ஆசிரியர் |

❖ *பாடசாலை அபிவிருத்திக் குழு* (SDC)

| | | |
|---|---|---|
| திரு.சி.சிவகுமார் | - | அதிபர் |
| திருமதி.சு.வினோதினி | - | செயலாளர் |
| திருமதி.ச.கலானந்தன் | - | பொருளாளர் |
| திரு.க.சிவமூர்த்தி | - | ஆசிரியர் |
| திருமதி.சி.சேயோன் | - | ஆசிரியர் |
| திருமதி.பா.ஜிபோனியா | - | பெற்றோர் |
| திருமதி.ச.அஜிதா | - | பெற்றோர் |
| திரு.ஞா.கிருபதீசன் | - | பழைய மாணவர் |
| திரு.அ.கயுந்தன் | - | பழைய மாணவர் |
| திருமதி.மகிலா. இராசேந்திரா | - | வலயப் பிரதிநிதி [ I.S.A(Com) ] |

❖ *பாடசாலை வரவழைத்தற் குழு*

| | | |
|---|---|---|
| திரு.சி.சிவகுமார் | - | அதிபர் |
| திரு.க.சிவமூர்த்தி | - | ஆசிரியர் |
| திருமதி.ச.கலானந்தன் | - | ஆசிரியர் |
| திருமதி.சி.சேயோன் | - | ஆசிரியர் |
| செல்வன்.கே.அபிஷாந் | - | மாணவர் |
| செல்வி.ந.விதுசனா | - | மாணவி |
| திருமதி.வி.சுதர்சினி | - | பெற்றோர் |
| திருமதி.கி.பத்மாவதி | - | பெற்றோர் |

| | | |
|---|---|---|
| திரு.ஞா.கிருபதீசன் | - | பழைய மாணவர் |
| திரு.செ.அல்கின் | - | பழைய மாணவர் |
| திரு.அ.கயுந்தன் | - | பழைய மாணவர் |

❖ *பாடசாலை வருகை தருதல் வசதிப்படுத்தற் குழு*

| | | |
|---|---|---|
| திரு.சி.சிவகுமார் | - | அதிபர் |
| திரு.க.சிவமூர்த்தி | - | சிரேஷ்ட ஆசிரியர் |
| திருமதி.சி.கிருஸ்ணமோகன் | - | சிரேஷ்ட ஆசிரியர் |
| திருமதி.ச.கலானந்தன் | - | ஆசிரியர் |
| திருமதி.சி.சேயோன் | - | ஆசிரியர் |
| திரு.சி.சுவேந்திரன் | - | பெற்றோர் |
| திருமதி.ஜெ.சுகிர்தகலா | - | பெற்றோர் |
| திருமதி.ரி.சுசரதா | - | பெற்றோர் |
| திருமதி.ய.தாட்சாயினி | - | பெற்றோர் |
| திரு.இ.கெங்கேஸ்வரன் | - | பழைய மாணவர் |
| திரு.சு.தயான் | - | பழைய மாணவர் |

**பாடசாலை பற்றிய சுருக்க வரலாறு**

பாடசாலையின் முகவரி :-

மானிப்பாய் வீதி, கைதடி மேற்கு, கைதடி.

கிராம உத்தியோகத்தர் பிரிவும் இலக்கமும் :-

J/293, கைதடி மேற்கு.

இலச்சினை விளக்கம் :-

சுடரும் தீபம்- கல்வி ஒளியைக் குறிக்கும். தீபத்தின் பின்னாலுள்ள நட்சத்திரம் (நீள்வளையங்கள்- சிவப்பு, நீலம், மஞ்சள்)- விஞ்ஞான பூர்வ அறிவுச் சின்னமாகும். இடதுபுறம் உள்ள வீரர்- விளையாட்டினையும், வலதுபுறமுள்ள பெண்- கலையினையும் குறிக்கும். நெற்கதிர்கள்- விவசாயம் மற்றும் கிராமியப் பண்பாட்டையும், நெற்கதிர்களை இணைக்கும் அச்சு- கைத்தொழிலையும் குறிப்பதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

கொடி விளக்கம் :-

வெள்ளைநிறம்:- தூய்மை மற்றும் கல்வியையும், மண்ணிறம் (பிறவுண்) :- மண்ணின்(கிராமிய) பெருமையைக் குறிக்கும்.

பாடசாலை உருவாக்கம் :- 1861ஆம் ஆண்டு கைதடி மேற்கைச் சேர்ந்த உயர்திரு.சதாசிவம் அவர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட நாலு பரப்புக் காணியில் அங்கிலிக்கன் திருச்சபையினால் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையாக விளங்கும் இப்பாடசாலை ஆரம்பத்தில் "சி.சி No-01" (C.C.No-01) பாடசாலை என்றே அழைக்கப் பட்டது. செமினரிப் பாடசாலையான இது 1966ஆம் ஆண்டு அரசுடைமையாக்கப்பட்ட போது யா/கைதடி கலைவாணி வித்தியால யமாகப் பெயர் மாற்றம் பெற்றது. இப்பெயரைச் சூட்டிய பெருமை அப்போது தலைமையாசிரியராகக் கடமையாற்றிய திரு.சின்னத்தம்பி அவர்களையே சாரும்.

**பாடசாலையின் அதிபர்கள் விபரம் :-**

யா/கைதடி கலைவாணி வித்தியாலயத்தில் 1910ஆம் ஆண்டுக்கு முன்னர் கடமையாற்றிய தலைமையாசிரியர்களின் விபரத்தை அறிய முடியவில்லை.

| | |
|---|---|
| 1910ஆம் ஆண்டு | :- திரு. பொன்னம்பலம் - தலைமையாசிரியர் |
| 1930ஆம் ஆண்டு | :- திருமதி. கிறேஸ் குணரட்ணம் அம்மையார் - தலைமையாசிரியர் |
| 1940ஆம் ஆண்டு | :- திரு. சுந்தரம் - தலைமையாசிரியர் |
| 1953ஆம் ஆண்டு | :- திரு. தம்புத்துரை ஐயா -தலைமையாசிரியர் |
| | :- திரு. சுப்பிரமணியம் - தலைமையாசிரியர் |
| | :- திரு. கந்தப்பு - தலைமையாசிரியர் |
| | :- திரு. அழுகரத்தினம் - தலைமையாசிரியர் |
| | :- திரு. சின்னத்தம்பி - தலைமையாசிரியர் |
| 1971- 1977 வரை | :- திரு. நாகராசா - தலைமையாசிரியர் |
| 1977- 1988 வரை | :- திரு. நா.கந்தையா - தலைமையாசிரியர் |
| 1989- 2011 வரை | :- திரு.ப. செல்லத்துரை - அதிபர் |
| 2012- 2016 வரை | :- திரு. நா.கருணாகரன் - அதிபர் |
| 2016- இன்று வரை | :- திரு. சி.சிவகுமார் - அதிபர் |




இடமிருந்து வலமாக:- திருமதி.சி.கிருஸ்ணமோகன், திருமதி.சி.சேயோன், திரு.க.சிவமூர்த்தி (உபஅதிபர்), திரு.சி.சிவகுமார் (அதிபர்), திருமதி.ச.கலானந்தன், செல்வி.த.சுந்தரலிங்கம்

# பரிசில் பெறுவோர் விபரம்
## *தரம் - 01 (2017)*

| | | |
|---|---|---|
| சு.ஷர்வின் | - | பொதுத்தேர்ச்சி |
| ச. நிஸாம் | - | பொதுத்தேர்ச்சி |
| ற. ராகவன் | - | பொதுத்தேர்ச்சி |
| ந. தருண் | - | பொதுத்தேர்ச்சி |
| சி. திபிசன் | - | பொதுத்தேர்ச்சி |
| ர. அனோமியா | - | பொதுத்தேர்ச்சி |
| ஜெ. அபிநயா | - | பொதுத்தேர்ச்சி |
| ய. மிஷாரா | - | பொதுத்தேர்ச்சி |
| லோ. தக்ஷனா | - | பொதுத்தேர்ச்சி |
| து. அனுஷ்கா | - | பொதுத்தேர்ச்சி |
| ர. சௌமியா | - | பொதுத்தேர்ச்சி |
| சி. சோபியா | - | பொதுத்தேர்ச்சி |
| ம. கிஷானிகா | - | பொதுத்தேர்ச்சி |
| ரா. வினுஷ்கா | - | பொதுத்தேர்ச்சி |
| அ. அகிஜா | - | பொதுத்தேர்ச்சி |

## *தரம் - 01 (2016)*

| | | |
|---|---|---|
| ரி. சதுர்சன் | - | பொதுத்தேர்ச்சி |
| அ. அபிஷாந் | - | பொதுத்தேர்ச்சி |
| த. பிரிஷாந் | - | பொதுத்தேர்ச்சி |
| த. சரணியன் | - | பொதுத்தேர்ச்சி |
| பி. ஸர்வின் | - | பொதுத்தேர்ச்சி |
| பா. மிகாசன் | - | பொதுத்தேர்ச்சி |
| ஜெ. ஹரிசாந் | - | பொதுத்தேர்ச்சி |
| ர. சதுர்சிகா | - | பொதுத்தேர்ச்சி |
| சு. வஸ்மி | - | பொதுத்தேர்ச்சி |
| சி. கிஷானா | - | பொதுத்தேர்ச்சி |
| பா. ஜஸ்மினா | - | பொதுத்தேர்ச்சி |

## தரம் - 02 (2016)

| | | |
|---|---|---|
| வி. யஸ்மிதன் | - | பொதுத்தேர்ச்சி |
| வி. தர்சனன் | - | பொதுத்தேர்ச்சி |
| து. ரிஷிதரன் | - | பொதுத்தேர்ச்சி |
| கே. அபிஷாந் | - | பொதுத்தேர்ச்சி |
| சு. கிதுர்சன் | - | பொதுத்தேர்ச்சி |
| அ. யூட்ஜஸ்வின் | - | பொதுத்தேர்ச்சி |
| ஜெ. டேனுஜன் | - | பொதுத்தேர்ச்சி |
| ஜெ. புவிதரன் | - | பொதுத்தேர்ச்சி |
| ஜெ. டர்சிகா | - | பொதுத்தேர்ச்சி |
| ச. மபிஷா | - | பொதுத்தேர்ச்சி |
| சி. லிசானா | - | பொதுத்தேர்ச்சி |
| சி. சுபஸ்திகா | - | பொதுத்தேர்ச்சி |

## தரம் - 03 (2016)

| | | |
|---|---|---|
| ஜெ. யதுசன் | - | பொதுப்பரிசு |
| ஜெ. ஷஜீன் | - | இணைபாடவிதானச் செயற்பாடு |
| ர. ரம்சிகன் | - | இணைபாடவிதானச் செயற்பாடு |
| ஜெ. டிலானி | - | கணிதம், சைவசமயம்,<br>ஆங்கிலம், தமிழ், சுற்றாடல். |
| சு. அட்சயா | - | கணிதம், சைவசமயம்,<br>ஆங்கிலம். |
| ந. விதுசனா | - | தமிழ், சுற்றாடல். |
| வே. வேணுஷா | - | பொதுப்பரிசு |

## தரம் - 04 (2016)

| | | |
|---|---|---|
| ரி. மதுசன் | - | தமிழ், கணிதம், சைவசமயம்,<br>ஆங்கிலம், சுற்றாடல். |
| பு. பிரியந் | - | பொதுப்பரிசு |

| | | |
|---|---|---|
| ம. வர்ணயா | - | தமிழ், கணிதம், சைவசமயம், ஆங்கிலம், சுற்றாடல். |
| செ. கிஷாயினி | - | இணைபாடவிதான செயற்பாடு |
| ர. கம்ஷிகா | - | பொதுப்பரிசு |

## *தரம் - 05 (2016)*

| | | |
|---|---|---|
| ர. மதுசிகன் | - | தமிழ், சைவசமயம், (புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல்) |
| பொ. லவநீதன் | - | புலமைப்பரிசில் பரீட்சை 70 புள்ளிகளுக்கு மேல் |
| சு. சுஜீவா | - | கணிதம், சுற்றாடல் (புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல்) |
| சே. லக்சனா | - | புலமைப் பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் |
| ர. மதுசிகா | - | தமிழ், சைவசமயம், ஆங்கிலம் (புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல்) |
| ற. கம்ஷா | - | கணிதம், சுற்றாடல், ஆங்கிலம் (புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல்) |

## *தரம் - 05 (2015)*

| | | |
|---|---|---|
| ஜெ. கிருஷிகன் | - | புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் |
| செ. தர்மிகன் | - | புலமைப் பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் |
| வே. தேனுஜன் | - | பொதுப்பரிசு |

| | | |
|---|---|---|
| ர. ஷாம்நாத் | - | புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் |
| சு. அபிநயா | - | புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் |
| சு. கிஷாளினி | - | புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் |
| த. சிந்துஜா | - | புலமைப் பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் |
| து. றஜிதா | - | புலமைப் பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் |

- - - - - - - - - -

# யா/கைதடி கலைவாணி வித்தியாலயம் - 2017

## *அதிபர், ஆசிரியர்களின் விபரம்*

| பெயர் | பதவியும் தரமும் | கல்வித் தகைமை மற்றும் தொழிற்றகைமை |
|---|---|---|
| திரு.சி.சிவகுமார் | அதிபர்<br>SLPS - 3 | B.A(Hons),M.A(Tamil),<br>PGDE,M.Ed |
| திரு.க.சிவமூர்த்தி | ஆசிரியர்<br>SLTS-1 | G.C.E(A/L),Tr.d(Primary) |
| திருமதி.சி.கிருஸ்ணமோகன் | ஆசிரியர்<br>SLTS-2-I | G.C.E(A/L),Tr.d(Primary) |
| திருமதி.ச.கலானந்தன் | ஆசிரியர்<br>SLTS-2-I | B.A,Tr.d(Primary),<br>PGDE |
| திருமதி.சி.சேயோன் | ஆசிரியர்<br>SLTS-2-II | B.F.A (Music) |
| செல்வி.த.சுந்தரலிங்கம் | ஆசிரியர்<br>SLTS-2-II | B.Sc (Hons) |



2016ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள்









தீபம் பிறிண்டேர்ஸ், 717, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 077 250 6234